14th March 1969]

டங்களுக்கு வழக்கமாக அனுப்புவதைவிட இரண்டு மடங்கு துரிதமாக அனுப்பவேண்டிய நிலையில் இருந்தபோது சில மூட்டைகளில் பயிர் முளைத்துவிட்டதாகத் தகவல் கிடைத்தது. முளைத்தது 2½ அங்குலமா 2¼ அங்குலமா என்று தகவல தரப்படவில்லை.

திரு. டி. கே. சுப்பையா: தலைவர் அவர்களே, நவீன நெல் உலர்த்தி இயந்திரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்த மில்லுக்கு நெல்லைக் கொண்டு செல்லவில்லையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது நடந்தது 1967-ல். நவீன மில் நிறுவப்படாத நிலையில் ஏற்பட்ட விளைவு இது. இந்த ஆண்டு நல்ல வெயில் காய்ந்ததால் உலர்த்தும் இயந்திரத்திற்கு வேலையில்லாமல் போய்விட்டது.

Andhra rice.

*112 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the quantity of rice imported into Tamil Nadu from Andhra Pradesh from April 1967 to the end of June 1968?

ஆந்திர அரிசி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆந்திராவிலிருந்து 1967 ஏப்ரல் முதல் 1968 ஜூன் முடிய தமிழகத்திற்கு வந்த அரிசி எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பதினைந்தாயிரத்து நூற்றைம்பது டன்கள் பச்சரிசி.

Government High School at K. Pudupatti village.

*113 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether a Government High School with 50 students has been started at K. Pudupatti village in Uthamapalayam taluk of Madurai district, even though a private High School is functioning there, with 350 students; and

(b) if so, the reason therefor?

அரசினர் உயர்நிலைப்பள்ளி, க. புதுப்பட்டி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட உத்தமபாளையம் தாலுகா க. புதுப்பட்டி என்னும் ஊரில் தனியார் உயர்நிலைப்பள்ளி 350 மாணவர்களுடன் இயங்கிவரும் பொழுது அதே ஊரில் 50 மாணவர்களுடன் சர்க்கார் உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?